# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● அக்டோபர் 20, 2018 Weekly E-paper ● October 20, 2018


உள்ளே...



இந்திய மீனவர்களுக்கு **அச்சுறுத்தல்**

– மா.உதயகுமார்




**நூல் அறிமுகம்**


– வெற்றிச்செல்வன்



மத்திய அரசின் **முகவர்...**

– தலையங்கம்





# அனுராதா ரமணன் தொடக்கிவைத்த... “நானும்தான்” (MeToo) இயக்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●அக்டோபர் 20, 2018 Weekly E-paper ●October 20, 2018

# அனுராதா ரமணன்
## தொடக்கிவைத்த...
## “நானும்தான்” (MeToo) இயக்கம்

சுப.வீரபாண்டியன்

“பாலியல் சீண்டல்களாலும், பாலியல் வன்முறைகளாலும் ‘நானும்தான்’ (MeToo) பாதிக்கப் பட்டேன். ஆனால் அவற்றை மீறி, இன்று சமூகத்தில் நான் மேலேறி வந்துள்ளேன். வா பெண்ணே நீயும் வா, அந்தத் துயரத்திலேயே மூழ்கிக் கிடக்காதே, எழு” என்று சொல்லி, பாதிப்புக்கு உள்ளான பெண்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் (Empowerment through Empathy) 2006 ஆம் ஆண்டு, தரானா பர்க் (Tarana Burke) என்னும் பெண்மணி My Space என்னும் சமூக வலைத்தளத்தில் இட்ட பதிவுதான் இந்த “நானும்தான்” என்னும் இயக்கத்தின் தொடக்கம் என்று வலைத்தளங்கள் பதிவு செய்துள்ளன. எனினும் MeToo என்னும் தொடர், 2017 அக்டோபர் 15 அன்று மிலானா (Milana) என்பவர் பயன்படுத்திய பிறகே உலகெங்கும் பரவிற்று என்றும் கூறுகின்றனர்.




ஆனால் உண்மையான வரலாறு மறைக்கப்படுகிறது என்றே சொல்ல வேண்டும். அந்த இயக்கம் தமிழ்நாட்டில்தான் உண்மையில் தொடங்கியுள்ளது. 2004 டிசம்பர் 2 ஆம் நாளிட்ட நக்கீரன் இதழின் அட்டைப்படக் கட்டுரையாகவே அது அமைந்துள்ளது. மறைந்த தமிழ எழுத்தாளர் அனுராதா ரமணன், காஞ்சி சங்கராச் சாரியாரால் தான் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதை ஒரு காட்சியாகவே விளக்கி எழுதியுள்ளார்.

வளையோசை என்னும் இதழைத் தான் தொடங்கிப் பெரும் நட்டத்திற்கு உள்ளானபோது, வங்கியில் கடன் வாங்கச் சென்ற வேளையில், அங்கு பணியாற்றிய மைதிலி ராகவன் என்பவர் தன்னைச் சங்கராச்சாரியாரிடம் அழைத்துச் சென்றதாகவும், அவர் முதல் நான்கு நாள்கள் தன்னிடம் ஆன்மிகம் பேசியதாகவும், ஐந்தாவது நாள், நிர்வாணமாகத் தன்னை அணுகிப் பாலியல் வன்முறைக்கு முயன்றதாகவும் ஒளிவு மறைவின்றி எழுதியுள்ளார்.

அதற்குப் பிறகு நடிகை சொர்ணமால்யா, பொன்பாடி என்னும் இடத்தில் உள்ள காஞ்சி மடத்தின் விருந்தினர் மாளிகையில் “சின்னப் பெரியவாளைச்” சந்தித்து “ஆசி” பெற்ற விவகாரமும், காவல்துறையினால் விசாரிக்கப்பட்டது அனைவரும் அறிந்த செய்தி.

## சபரிமலையில் கவிதா

சபரிமலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என்னும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ஒரு குழுவினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால் எதற்கும் அஞ்சாமல், தெலங்கானா மாநிலத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் கவிதா அங்கு சென்றுள்ளார். இந்த இதழ் முடியும் தருணத்தில், அடுத்து என்ன நடக்கும் என்று சொல்ல முடியாதபடி பதற்றமான சூழல் அங்கு நிலவி வருகின்றது. இது குறித்துத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கருத்து அடுத்த இதழில் வெளியாகும்.

## முன்பக்கத் தொடர்ச்சி...

எனவே தமிழ்நாட்டில்தான் “மீ டூ” என்னும் பெண்களின் இயக்கம் தொடங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது. .

இந்த இயக்கம், அடக்கி வைக்கப் பட்ட பெண்களின் குமுறல்கள் வெளிப்பட ஒரு வடிகாலாக ஆகியுள்ளது. வரும் காலத்தில் தவறு செய்ய நினைக்கும் ஆண்களுக்குப் பெரிய எச்சரிக்கையாகவும் உள்ளது.

ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின் இதனை வெளியிடுவது ஏன் என்ற வினா என் போன்றவர்களிடமும் எழுந்தது. பெண்ணின் வலியையும், துயரத்தையும் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் வெளியிட்டால் என்ன என்று தோழர்கள் சிலர் தங்களின் குரலைப் பதிவு செய்தபோது, அதன்



நக்கீரன் 2004 டிச. 02

உண்மையை உணர்ந்தேன். அதனால் என் ட்வீட் ஒன்றைக் கூட உடனே விலக்கிக் கொண்டேன்.

அவர்கள் சொல்வதே சரியானது. எழுத்தாளர் அனுராதா ரமணன் கூட, 12 ஆண்டுகளுக்குப் பின்பே தன் வலியை நக்கீரன் இதழில் வெளிப் படுத்தியுள்ளார்.

அதே நேரம், அனுராதாவின் குற்றச்சாற்றிற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று கேட்கின்றனர்.

கேள்வி நியாயமானதே. எந்த ஆதாரமும் இல்லாமல், யார் வேண்டுமானாலும், யார் மீதும் ஒரு பொய்யான குற்றச் சாட்டினை வைப்பதற்கும் இந்த இயக்கத்தில் இடமுள்ளது என்னும் ஆபத்தை நாம் எளிதில் புறந்தள்ளி விட முடியாது. ●

# இந்திய மீனவர்களை அச்சுறுத்தும் இலங்கை அரசு

● உதயகுமார்

இந்திய மீனவர்களுக்கு மனிதநேயமற்ற அபராதம் விதிக்கும் இலங்கை அரசின் புதிய சட்டம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

ஆகஸ்ட் பதினெட்டாம் தேதி தூத்துக்குடியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, படகுகளும் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் மீனவர்களுக்குத் தலா ரூபாய் 60 லட்சம் அபராதமும் 3 மாதம் சிறைத் தண்டனையும் விதித்திருப்பது ஒரு சர்வாதிகாரி இல்லை, இலங்கை கல்பிட்டி நீதிமன்றம்.

தமிழக மீனவர்களைத் தொடர்ந்து அச்சுறுத்தும் வகையிலான செயல்களில் இதுவரை இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டு வந்தனர். தற்போது இலங்கை நீதிமன்றம் அச்செயலைச் செய்யத் தொடங்கி இருக்கிறது.

தீர்ப்பினால் இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே இணக்கம் இல்லாமல் போய் வெறுப்பே மேலும் ஏற்படும்.

இது மீனவர் பிரச்சினையை மேலும் பன்மடங்காக்கும்.

அளவின்றி அபராதம் விதிப்பது அத்துமீறிய மனிதநேயமற்ற செயல் ஆகும்.

இதனைச் சர்வதேச நாடுகள் கண்டிக்க வேண்டும். குறிப்பாக இந்திய அரசு பாதிக்கப்படும் தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய மீனவர்களாகக் கருத்தில் கொண்டு இலங்கை அரசுடன் பேசி இச்சட்டத்தை ரத்து செய்ய வழிவகை செய்ய வேண்டும். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசானால் இவ்வாறு செய்யும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கும் ஆட்சியாளர்கள் இப்படிப்பட்ட செயலைச் செய்வார்கள் என்பதை நாம் எதிர்பார்ப்பது நம்முடைய அறியாமையாகும்.



இருந்தாலும் ஆட்சியாளர்களிடமே நாம் முறையிட முடியும். ஒரு ஒன்றியத்தில், கூட்டாட்சி முறையில், அங்கம் வகிக்கும் மாநிலங்களின் பாதுகாப்பிற்காகவே முக்கியமாக அந்த ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப் பக்கத்து நாட்டுக் கடற்படையினரால் இவ்வளவு அத்து மீறல்கள் ஏற்பட்டும் அவை கண்டு கொள்ளப்படாமல் இருப்பது பல கேள்விகளை எழுப்புகிறது.

இந்திய ஒன்றியம் தமிழ்நாட்டுடன் கூட்டாட்சியில் இருக்கிறதா அல்லது இலங்கை அரசுடன் கூட்டாட்சியில் இருக்கிறதா என்கிற அடிப்படைக் கேள்வி எழுகிறது.


பாதிக்கப்படும் அப்பாவி மக்களுடைய வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு இந்தச் சட்டத்தில் தலையிட்டு நல்ல ஒரு முடிவைக் கொண்டுவர உடனடியாக முயற்சி எடுக்க வேண்டும்.

தற்போது இலங்கைப் பிரதமர் இந்தியாவிற்குச் சுற்றுப்பயணம் வந்திருக்கிறார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக மீனவர்களுக்கு எதிராக இந்திய மீனவர்களுக்கு எதிராக கொண்டுவரப் பட்டிருக்கும் சட்டத்திற்குக் கண்டனத்தை இந்திய அரசு தெரிவிக்க வேண்டும். இங்குள்ள தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். தமிழ்நாட்டில் defence corridor அமைப்பதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.

முதலில் எங்கள் மீனவர்களை இலங்கைக் கடற்படையினரிடமிருந்தும் சில சமயங்களில் இந்தியக் கடற் படையினரிடமிருந்தும் காப்பாற்றுங்கள். ●

## சட்டப்படி குற்றம்!

### அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை கொண்டாடுவோர் கவனத்திற்கு...


**அரசு அலுவலகங்களில் கடவுள் பட நீக்கம் ஆணை**

அந்தரங்கச் செய்தி

**தமிழக அரசு**

பொது (ஜெனரல் எம்) இலாகா
நினைவுக் குறிப்பு எண் : 7553/66-2
நாள் 29 ஏப்ரல் 1968

விஷயம் : எந்த மதத்தைச் சேர்ந்ததாயினும் கடவுள்கள், பெண் கடவுள்கள் படங்கள் – சிலைகள் ஆகியவற்றை பொது அலுவலகங்களிலிருந்து நீக்குதல்.

இலாகா தலைவர்களுக்கு அறிவித்துக் கொள்ளப்படுவதாவது – மதச் சார்பற்ற ஆட்சி நாடு ஆகையால் – எந்த மதத்தைச் சார்ந்த சாமியார்கள் (சாதுக்கள், மகான்கள் அவதாரங்கள் உள்பட) கடவுள்கள், பெண் கடவுள்கள் ஆகியவற்றின் படங்கள் – சிலைகள் முதலியவற்றை அரசாங்க அலுவலகத்தில் அல்லது அரசுக்குச் சொந்தமான இடத்தில் வைத்திருப்பது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது.

இந்தக் கட்டடங்களில் இப்போது இவைகள் இருக்குமாயின் அவற்றை படிப்படியாகவும் எந்தவித ஆடம்பரமுமில்லாமலும் பிறர் கவனத்தை ஈர்க்காத வகையிலும் அல்லது எவ்வித அசம்பாவிதம் நிகழாத வகையிலும் அகற்ற வேண்டும்.

– சி.அ. ராமகிருஷ்ணன்,
அரசினர் தலைமைச் செயலாளர்

/ உண்மை நகல் /

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## இளைஞரணியினர் கலந்துரையாடல்



14.10.2018 அன்று மாநில இளைஞரணி அமைப்பாளர் சந்தானம் தலைமையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மாநிலத் துணை அமைப்பாளர்கள் தோழர்கள் கார்த்திக், ஜெகநாதன், சென்னை மாவட்ட அமைப்பாளர் ஸ்ரீவித்யா, திருச்சி மாவட்ட அமைப்பாளர் பிரவீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நூல்கள் வெளியீட்டு விழா



6.10.18இல் நடந்த 25 அருந்தமிழ் நூல்கள் வெளியீட்டு விழாவில் முன்னாள் அமைச்சர் ஆ. இராசா, தோழர் சுபவீ, திரு பொன்குமார், திரு சூரியன் பாலா, நூலாசிரியர் இரா கண்ணன் ஆகியோர்.

## வரலாற்று ஆய்வரங்கம்



6.10.18 அன்று காலை, சென்னைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்நாடு வரலாற்றுப் பேரவையின் சார்பில் நடைபெற்ற வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தரங்கில் தோழர் சுபவீ பங்கேற்று உரையாற்றினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநர் மத்திய அரசின் முகவர்

ஆட்டுக்குத் தாடி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அதனால் எதற்கும் எந்தப் பயனும் இல்லை. மாநிலங்களில் ஆளுநர்களுக்கும் இது பொருந்தும் என்றார் அறிஞர் அண்ணா.

GOVERN என்ற சொல்லுக்கு 'ஆட்சி' என்பது பொருள். GOVERNER என்றால் (மாநிலத்தின்) 'ஆட்சியர்'.

இவர் இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதி மாநில ஆட்சியராக வருபவரன்று.

மாறாக மத்திய ஆளும் அரசினால், நியமிக்கப்படுபவர். இவரை மத்திய அரசின் 'ஏஜன்ட்' என்பதுதான் சரி.

மத்திய அரசுக்குச் சார்பாக, ஆதரவாகச் செயல்படுவதும், அதற்கேற்பத் தன் வேலைகளை அமைத்துக் கொள்வதும் இவர்களின் பணி.

அதனால்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில முதல்வரையும், அரசையும் மீறி அரசியல் அமைப்புக்கு மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், புதுவைத் துணை நிலை ஆளுநர் கிரண்பேடி இவ்விருவரும் இதற்குச் சான்று.

குறிப்பாக புதுவை, காலப்பட்டில் இருக்கும் அரசு சட்டக் கல்லூரிக்குச் சென்றார் கிரண்பேடி.

கல்லூரி முதல்வரைச் சந்தித்தபின் அங்கிருந்து புறப்பட்ட துணைநிலை ஆளுநரிடம், அக்கல்லூரியின் மாணவர்கள், கல்லூரியில் தங்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப் படுகின்றன என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்கவும் வேண்டுகோள் விடுத்தனர்.

அவ்வளவுதான்! தான் மழைநீர் சேகரிப்பு குறித்து மட்டுமே முதல்வரிடம் பேச வந்ததாகவும், வேறு எதிலும் தலையிட முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

தேவையில்லாத விசயங்களில் தலையிடும் ஆளுநர், மாணவர்களின் பிரச்சனையில் இருந்து விலகியதால் மாணவர்கள் அவரைச் சிறை பிடித்துள்ளனர்.

இது ஆளுநரின் அலட்சியத்தையும், அவரின் ஆணவத்தையும் காட்டுவதாக அல்லவா இருக்கிறது.

மாணவர்கள் இந்நாட்டின் எதிர்காலம். அவர்களின் உரிமையைக் கூடப் பாதுகாக்க கிரண்பேடி முன்வராத நிலையில், அவர் ஆளுநராக இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன- ஆட்டுத்தாடியைப் போல.

## ச.நிலவன், ச.நித்திலன் பிறந்தநாள்




16.10.2018 அன்று பேரவையின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் மு.மாறனின் பேரக்குழந்தைகள் ச.நிலவன், ச.நித்திலன் ஆகியோரின் முதல் பிறந்தநாள் விழாவில் தோழர் சுப.வீரபாண்டியன், அவரின் வாழ்விணையர் வசந்தா.

நூல் அறிமுகம்

# THE DRAVIDIAN YEARS

## ● வெற்றிச்செல்வன்

அண்மையில் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கும் 'THE DRAVIDIAN YEARS' என்ற நூல், தமிழகத்தின் வளர்ச்சிக்குத் திராவிடக் கட்சிகள் ஆற்றிய பங்களிப்பைக் குறித்துப் பேசுகிறது. இந்நூலை எழுதிய திரு.எஸ்.நாராயண் என்பவர் பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப்பணியாற்றியவர். அரசின் திட்டங்கள் பலநிறைவேறுவதைக் கண்கூடாகக் கண்டவர். எனவே அவருடைய பார்வையில் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி பேசியிருப்பது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது. திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்கு அடித்தளமாக அமைந்த தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவதோடு தொடங்கும் இந்நூல், இந்தியாவில் ஒரு வகுப்பினரின் ஆதிக்கத்தை எதிர்த்து வேறெங்கும் இதுபோன்ற இயக்கம் தோன்றவில்லை என்கிறது. விடுதலைக்குப் பின் அமைந்த காங்கிரஸ் ஆட்சியில் பின்பற்றப்பட்ட ஆங்கிலேயரின் கொள்கைகள் அதிகாரத்தின் மேலிருந்து கீழாகச் சென்றன (Top to bottom approach). அண்ணாவின் காலத்தில்தான் இதில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. மக்களின் தேவைகளைப் பொறுத்தே கொள்கை முடிவுகள் அமைந்தன. இதுகீழிருந்து மேலாகக் கொள்கை அணுகுமுறைகளை முடிவு செய்தன.




கலைஞரின் ஆட்சியில் அரசுப் பணிகளில் பார்ப்பனரல்லாத வகுப்பினர் பிரதிநிதித்துவம் மிகுந்ததையும், இதனால் அதிகாரக் கட்டமைப்பில் பெரும் மாற்றம் நிகழ்ந்ததாகவும் நூலாசிரியர் கூறுகிறார். அரசின் நிர்வாகத்தில் ஒரு சமூகச் சமன்பாடு ஏற்படுத்துவதை நோக்கிய முக்கியமான ஒரு நகர்வாக இதனைக் குறிப்பிடுகிறார்.

தொழிற்பேட்டைகள், தொழில் வளர்ச்சிக் கழகங்களை உருவாக்கியது, 5 முதல் 12 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு வருமான வரி விலக்களித்தது, தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் மூலம், நபர் ஒருவர்க்கு உச்சவரம்பினை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைத்தது என்று கலைஞர் அரசின் பல்வேறு சாதனைகளைப் பட்டியலிடும் இந்நூல், திராவிடஇயக்கத்தின் சமூக நீதி சார்ந்த குறிக்கோள்களை நடைமுறைப்படுத்தக் காரணமாக அமைந்தது திமுக அரசே என்கிறது.

1977 முதல் 1987 வரையிலான அதிமுக அரசு முந்தைய திமுக அரசிலிருந்து பல்வேறு விதத்திலும் வேறுபட்டிருந்ததை எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர். பார்ப்பனியத்திற்கு எதிரான போக்கை எம்.ஜி.ஆர் ஆதரிக்கவில்லை, மாநில சுயாட்சி குறித்த முன்னெடுப்புகள் ஏதும் நடக்கவில்லை ஆகிய குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார். இதழ்கள், நூல்கள் வாயிலாகப் படித்தவர்களை திமுக அணுகிய நிலையில், பெரும்பாலும் அரசியல் அறிவு பெறாத மக்களை அதிமுக திரைப்படம் வாயிலாகச் சென்றடைந்தது; கலைஞரைப் போல எம்.ஜி.ஆர். ஒரு மேடைப்பேச்சாளராக இல்லாத நிலையில், திரைப்படம் மூலமாகவே மக்களிடம் பிரபலமானார்; கட்சியின் கட்டமைப்பும் திமுகவைப் போல அல்லாது பலவீனமாக இருந்ததோடு, தலைமையிடமே அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தன என்பன போன்ற செய்திகள் பலரும் அறிய வேண்டியது. சத்துணவுத் திட்டத்தை அதிமுக அரசின் முக்கியச் சாதனையாகக் குறிப்பிடும் நூலாசிரியர், எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில்தான் தனியார் சுயநிதிக்கல்லூரிகள் உருவானது என்கிறார். பெரும்பாலும் அரசியல்வாதிகளே இக்கல்லூரிகளைத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெயலலிதா முதல்வராக இருந்த பொழுது, சமூகநீதி, இட ஒதுக்கீடு சார்ந்த திட்டங்கள் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே முன்னெடுக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டும் நூலாசிரியர், 1991–96 காலகட்டத்தில் மருத்துவத்துறையிலும், நடந்த முன்னேற்றங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

1996 முதல் 2016 வரையிலான காலகட்டம் 130 பக்கங்களுக்குள்ளாக சுருக்கப்பட்டுள்ளது. உழவர் சந்தை, சமத்துவபுரம், அம்மா உணவகம் போன்ற திட்டங்களைச் சிறந்தவையாகப் பட்டியலிடும் நூலாசிரியர், சமூக நலத் திட்டங்களில் இருந்து இலவசங்களை நோக்கி அரசு நகர்ந்ததாகக் குற்றம் சாட்டுகிறார்.

சில இடங்களில் நடுநிலையான அணுகுமுறை தவறியிருப்பதாகத் தோன்றுகிறது. என்றாலும் திராவிடக் கட்சிகளால் தமிழகம் சீரழிந்தது என்று கூசாமல் பொய் பேசி வருவோர்க்குத் தகுந்த பதிலைத் தேவையான நேரத்தில் தந்துள்ளது இந்நூல். ●


## வினாவும் விடையும்

**ஒரு கொலையில் தொடர்புடைய ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோருவது அடிப்படையில் நியாயமான ஒன்றா? அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைப்பதன் மூலம் நாம் அவர்களுக்கு ஒரு தியாகி பிம்பம் தானே கொடுக்க முயல்கிறோம்? சரி, பல காலம் சிறையில் அவதிப்பட்டார்கள் என்ற மனிதாபிமான அடிப்படையிலிருந்து அவர்கள் விடுதலையடைய வேண்டும் என்ற கோரிக்கை வைத்தால், சிறையில் அவர்கள் மட்டும் தான் அவதிப்படுகிறார்களா? இவர்களைப் போல் சிறையில் வாடும் ஆயிரக்கணக்கான மனிதர்களையும் விடுதலை செய்து விடலாமா? ஒரு பேட்டரி வாங்கி கொடுத்ததற்காக 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவருக்குச் சிறைவாசம் கொடுக்கலாமா என்றால், பேரறிவாளனின் விடுதலையைப் பற்றி மட்டும் கோரிக்கை வைக்கலாமே? மற்ற ஆறு பேரும் எதன் அடிப்படையில் விடுதலையடைய வேண்டும் என்கின்றீகள்? குண்டு வெடிப்பில் ராஜிவ் காந்தியோடு பலியான தமிழர்களின் குடும்பங்கள் இந்த ஏழு பேரின் விடுதலை குறித்த கோரிக்கையை ஆதரிப்பார்கள் என்று தோன்றுகிறதா உங்களுக்கு?**

**– நாஞ்சில் திராவிடன், நாகர்கோவில்**

எல்லோரையும் எந்த விசாரணையும் இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும் என்று யாரும் எப்போதும் கோரவில்லை. விசாரணையில் நடைபெற்ற பல தவறுகளைக் காவல் அதிகாரிகளே சுட்டிக் காட்டிய பிறகும், தீர்ப்பு எழுதிய நீதிபதி ஒருவரே தன் கருத்தை மாற்றிக் கொண்ட பிறகும்தான் விடுதலை கோருகிறோம். வாழ்நாள் தண்டனை என்பது ஒரு கால எல்லை உடையதாக இருக்க வேண்டும் என்பதை, சிறையில் உள்ள அனைத்துக் கைதிகளுக்கும் பொதுவான கோரிக்கையாகவே முன்வைக்கிறோம். ஒரு வழக்கில் வழங்கப் படும் தீர்ப்பும், அதில் ஏற்படக்கூடிய மாற்றங்களும், அந்த வழக்கினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப நிலைகளைக் கொண்டோ, அவர்கள் ஆதரிப்பார்களா இல்லையா என்பதைக் கொண்டோ முடிவு செய்யப் படுவதில்லை. கொலை செய்யப்பட்டவர் யார் என்பதன் அடிப்படையிலும், தீர்ப்புகளை நீதிமன்றங்கள் எழுதுவது இல்லை, எழுதவும் கூடாது.

## எதிர்வினை



தேசத் துரோக பூச்சாண்டி வழக்கு குறித்த அய்யாவின் தலையங்கம், பரியேறும் பெருமாளின் அருமையான விமர்சனம், சூழலியல் ஆர்வலர் சுந்தரராஜன் பேட்டி என கடந்த வார இதழ் மிக அருமையாக இருந்தது!

**ராஜராஜன், சிங்கப்பூர்.**

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.